பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 20 ஞாயிற்றுக்கிழமை 05.09.2021 கதிர் 168

## உடல்களைப் புதைக்க மேலும் இரு இடங்கள்

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்த வர்களின் உடல்களை அடக்கம் செய்ய மேலும் இரண்டு இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

திருகோணமலை, புத்தளம் ஆகிய பகுதிகளில் சடலங்களை அடக்கம் செய்யக்கூடிய காணிகள் தொடர்பில் முன்மொழிவுகள் ☞2

## நல்லூரான் உள்வீதியில் தேரில் பவனி வெளியில் பெருமளவான பொலிஸார்





(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர் முருகன் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் தேர் உற்சவம் இன்று ஆலய உள்வீதியில் இடம்பெற்ற நிலையில் ஆலயச் சூழலில் பெருமள ☞2

## ஒரே நாளில் மட்டும் 1,083 பேர் மாட்டினர்

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிய குற்றச்சாட்டின் பேரில் நேற்று 1,083 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு இன்று காலை வெளியிட்டுள்ள காணொலிப் பதிவிலேயே அவர் இதனைக் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுகாதார விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றனவா என்பது தொடர்பில் ஆராய்வதற்காகத் தொடர்ந்தும் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் நேற்றும் முன்னெடுக்கப்பட்டன.

சுகாதார அமைச்சால் பிறப்பிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக நேற்று 1,083 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது 191 வாகனங்களும் தடுப்புக் காவலில் எடுக்கப்பட்டுள்ளன. ☞2

# ஜெனிவா அறிக்கைக்குழப்பம்: தமிழரசு எம்.பிக்கள் கூட்டாக விளக்குவர்

## அரசியல் உயர் குழு இன்று காலையில் அவசரமாகக் கூடி ஆராய்ந்து தீர்மானம்

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 05

ஜெனிவாவுக்கு அறிக்கை அனுப்பும் விடயத்தை ஒட்டி தமிழ் கூட்டமைப்புக்குள் பிளவு ஏற்பட்டிருக்கும் நிலையில், உண்மையில் நடந்தது என்ன என்ற விவகாரத்தை தமிழரசுக்கட்சியின் எம்.பிக்கள் ஒன்றுகூடி தமிழ் மக்களுக்கு விளக்க வேண்டும் என்று இலங்கை தமிழரசுக் கட்சி அவசர அவசரமாக முடிவு எடுத்திருக்கிறது.

ஜெனிவாவில் நடைபெற ☞2

## 40 லட்சம் சினோபார்ம் தடுப்பூசிகள்: ஒரு தொகுதி இன்று காலை நாட்டுக்கு

### நாளை வருகின்றது மற்றைய தொகுதி

சீனாவிடமிருந்து இலங்கை அரசால் கொள்வனவு செய்யப்பட்ட மேலும் 40 லட்சம் சினோபோர்ம் தடுப்பூசிகளின் முதலாவது தொகுதி நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான விசேட சரக்கு விமானத்தில் இன்று அதிகாலை குறித்த தடுப்பூசிகள் கட்டுநாயக்க விமான நிலையத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. ☞2

## தெற்கு கடலில் ஹெரோயினுடன் கைதான வெளிநாட்டவர்களில் ஒருவருக்குத் தொற்று

தெற்கு கடலில் மீன்பிடிப் படகு ஒன்றில் 310 கோடி ரூபா பெறுமதியுடைய 336 கிலோ கிராமுக்கும் மேற்பட்ட ஹெரோயின் போதைப்பொருளுடன் கைதான வெளிநாட்டுப் பிரஜைகளில் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது.

இந்தச் சுற்றிவளைப்பின் போது 07 பாகிஸ்தான் பிரஜைகள் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்கள் கொழும்புத் துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்ட போது மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது.

அவர் பொலிஸாரின் பாதுகாப்புடன் சிகிச்சைக்கு ☞2

## கொரோனாவால் மரணித்தவர்களுக்கு மனோ தலைமையில் அஞ்சலி நிகழ்வு



கொரோனாவால் மரணித்த அனைத்து இலங்கையர்களுக்குமான அஞ்சலி செலுத்தும் நிகழ்வு தமிழ் முற்போக்குக் கூட்டணியினதும் ஜனநாயக மக்கள் முன்னணியினதும் தலைவர் மனோ கணேசன் எம்.பியின் தலைமையில் ☞2

## சுற்றுலாப் பயணிகள் சுற்றித்திரிய அனுமதி

கொரோனாத் தடுப்பூசிகளைப் பெற்ற இலங்கை வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள், தனிமைப்படுத்தல் நடைமுறையின் பின்னர் நாட்டின் ஏனைய இடங்களுக்குச் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானம் குறித்த விவரங்கள் சகல மாகாண சுகாதாரப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. ☞2

## இருபது வயதுக்கு மேற்பட்டோருக்கு கொழும்பில் நாளை முதல் தடுப்பூசி

கொழும்பு 1 - 15 வரையான பிரதேசங்களில் வசிக்கும் 20 - 30 வயதுகளுக்கு இடைப்பட்ட அனைவருக்கும் சினோபோர்ம் கொரோனாத் தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகள் நாளை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

நாளை காலை 9 மணிமுதல் மாலை 3 மணிவரை இந்தத் தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

கொழும்பு மாநகர சபையின் தொற்று நோயியல் பிரிவின் வைத்திய நிபுணர் தினுகா குருகே தமது டுவிட்டர் பக்கத்தில் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## தமிழரசு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடருக்குத் தமிழ் மக்களின் சார்பில் அவர்களின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தும்அறிக்கையைஅனுப்பும் விடயத்தில்தமிழ்தேசியக்கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான இலங்கை தமிழரசுக் கட்சியை ஓரங்கட்டி, மற்றைய இரண்டு பங்காளிக் கட்சிகளான ரெலோ, புளொட் ஆகியவை கூட்டமைப்புக்கு வெளியிலுள்ள தமிழ்க் கட்சிகளுடன் ஓரணியில்கைகோர்த்துஅதிரடிநடவடிக்கை எடுத்திருக்கின்ற பின்னணியில், கூட்டமைப்பு பிளவுபட்டிருப்பது அம்பலமாகி உள்ளது.

இந்தப் பின்புலத்தில் நடந்த விடயங்களை இலங்கை தமிழரசுக் கட்சியி எம்.பிக்கள் அறுவரும் நாளை ஒன்று கூடி, இது விடயத்தில் உண்மையில் நடந்தவை என்ன என்பதை தமிழ் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என தமிழரசுக் கட்சியின் அரசியல்குழு தீர்மானித்திருகின்றது.

நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணி, சுரேஷ் பிறேமச்சந்திரனின் ஈ.பி.ஆர்.எல்.எவ்., சட்டத்தரணி சிறிகாந்தாவின் தமிழ்த் தேசியக் கட்சி ஆகியவற்றுடன் சேர்ந்து ரெலொ, புளொட் ஆகியவற்றின் தலைவர்களும், எம்.பிக்களும் ஒப்பமிட்டுத் தனியாக அறிக்கை ஒன்றை நேற்று ஐ.நா. மனித உரிமைகள்ஆணையாளருக்குஅனுப்பி வைத்தனர் என்று செய்தி அதிரடியாக வெளியானமை தெரிந்ததே.

தமிழர்களின் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இந்த விவகாரத்தில் கூட்டமைப்பின் ஐக்கியத்தை உடைத்து, ரெலோவின் முன்னெடுப்பில் மேற்கொள்ளப்பட்ட இந்த சதித்திட்டத்தில் புளொட்டும் பங்கு கொண்டிருப்பதாக இலங்கை தமிழரசுக்கட்சியின் மூத்த, முக்கிய தலைவர்கள் கருதுகின்றனர்.

இந்தப் பின்புலத்தில் குறுகிய ஓரிரு மணி நேர முன்னறிவித்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு இன்று காலை 10 மணி முதல் இரண்டு மணி நேரம் அவசரஅவசரமாக மெய்நிகர் முறையில் கூடியது.

கட்சித்தலைவர்மாவைசேனாதிராஜா தலைமையில்நடைபெற்றஇக்கூட்டத்தில் சி.வீ.கே.சிவஞானம், செல்வராஜா, மருத்துவர் சத்தியலிங்கம், சுமந்திரன், ஸ்ரீதரன், குலநாயகம், கலையரசன், துரைராஜசிங்கம் ஆகிய ஒன்பது பேர் பங்குபற்றினர். இரா.சம்பந்தனும் சட்டத்தரணி கே.வி.தவராசாவும் கலந்து கொள்ளவில்லை. நடந்த விடயங்கள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. கூட்டத்தில் பங்கேற்ற பலரும் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜாவின் செயற்பாடுகள் குறித்து குறை கூறினர் என அறிய வந்தது.

உண்மையில் நடந்தவை என்னவென்பதை தமிழரசுக் கட்சியின் எம்.பிக்கள் நாளை கொழும்பில் ஒன்று கூடி ஆராய்ந்து, எழுத்து வடிவத்தில் மக்களுக்கு உண்மையைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று முடிவு செய்தனர் என அறிய வந்தது

## ஒரே நாளில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிய குற்றச்சாட்டில் 66 ஆயிரத்து 730 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நாட்டு மக்கள் சிலர் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிச் செயற்படுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது. ஆகவே, சட்டத்துக்கு மதிப்பளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அத்துடன், கடந்த 24 மணிநேரத்தில் மேல் மாகாண எல்லையைக் கடக்க முற்பட்ட 568 வாகனங்களில் பயணித்த 1,054 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அதேவேளை, மேல்மாகாணத்தின் 13 நுழைவாயில்களிலின் ஊடாக மேல் மாகாணத்தினுள் நுழைய முற்பட்ட 684 வாகனங்களில் பயணித்த 1,220 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் - என்றார்.

## 40 இலட்சம்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

16 ஆயிரத்து 192 கிலோகிராம் நிறை கொண்ட 42 பெட்டிகள் இவ்வாறு முதல் தொகுதியாக இன்று கொண்டுவரப்பட்டுள்ளன.

இதன் இரண்டாவது தொகுதி நாளை நாட்டுக்குக் கிடைக்கப்பெறவுள்ளது.

இலங்கையால் இதுவரையில் 2 கோடி 20 லட்சம் சினோபோர்ம் தடுப்பூசிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என்று இலங்கையிலுள்ளசீனத்தூதரகம் கடந்த வாரம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு அறிவித்திருந்தது.

## கொரோனாவால்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு முகத்துவாரம் காளி கோயில் முன்பாக இன்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் கொழும்பு மாநகர சபை உறுப்பினர்களான ஜி.விஷ்ணுகாந், சிவரஞ்சன், சிவகுமார், வசந்குமார் மற்றும் ஜனநாயக மக்கள் முன்னணியின் உறுப்பினர்களும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

## தெற்கு கடலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உட்படுத்தப்பட்டுள்ளார்.

பொலிஸார், கடற்படையினர் மற்றும் புலனாய்வுப் பிரிவினர் இணைந்து முன்னெடுத்த இந்தச் சுற்றிவளைப்பின்போது 1,370 கிலோமீற்றர் தொலைவில் சர்வதேச கடல் எல்லையில் குறித்த படகுடன் எழுவரும் கைதுசெய்யப்பட்டனர்.

இந்நிலையில், தொற்றாளர் தவிர்ந்த ஏனைய அறுவரிடமும் மேலதிக விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன.

## சுற்றுலாப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுகாதார விதிமுறைகளுடன் விருந்தகங்கள், உணவகங்கள் போன்றவற்றுக்குச் செல்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இது தவிர, மதுவரி ஆணையாளர் நாயகத்தின் அனுமதிப் பத்திரத்தைக் கொண்ட மதுபானசாலைகள், சுற்றுலாப் பயணிகளுக்கு மதுபானத்தை விநியோகிக்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## உடல்களைப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடைத்துள்ளன என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

எனினும், இந்தக் காணிகளைப் பயன்படுத்த இறுதி அனுமதி இதுவரை கிடைக்கவில்லை என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் உயிரிழப்போரின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு பொருத்தமான காணிகள் தொடர்பான தகவல்களை வழங்குமாறு பிரதேச செயலாளர்கள், சுகாதார அதிகாரிகள் அனைவருக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது.

அதிகாரிகளால் வழங்கப்படும் தகவல்களுக்கு அமைய, பொருத்தமான காணிகள் தெரிவு செய்யப்படும் என்று சுகாதார அமைச்சர் அறிவித்துள்ளார்.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களில் 2 ஆயிரத்து 522 பேரின் சடலங்கள் மட்டக்களப்பு - ஓட்டமாவடி பகுதியில் அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

ஓட்டமாவடி மயானத்தில் மேலும் 300 சடலங்களைப் புதைப்பதற்கான காணி மாத்திரமே காணப்படுகின்றது என்றும் சுகாதார அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## நல்லூரான்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வான பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

நல்லூர் ஆலய தேர் உற்சவத்தைத் தரிசிக்க அடியவர்கள் ஆலயத்துக்கு வருவதைத் தடுக்கும் முகமாக நல்லூர் ஆலய சூழலில் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டது

ஆலய உற்சவத்தின்போது அமைக்கப்படும் வீதித் தடைகளைத் தாண்டி யாரும் உட்செல்ல அனுமதிக்கப்படவில்லை.

ஆலயத்துக்குமுன்பாகபொலிஸாரின் பஸ் ஒன்று வீதிக்குக் குறுக்காக நிறுத்தப்பட்டது. நல்லூர் ஆலய வளாகத்துக்குள் செல்லத் தடை விதிக்கப்பட்டது.




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இலங்கையின் அபத்த நாடகம்

இன்னும் ஒரு வாரத்தில் ஜெனிவாவில் ஆரம்பமாக இருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் நாற்பத்தி எட்டாவது கூட்டத்தொடர் பற்றிய பேச்சுதான் இப்போதும், இந்தக் கொவிட் தொற்றுப் பேரிடர் நெருக்கடிக்கு மத்தியிலும் நாட்டில் முக்கியத்துவம் பெற்றிருக்கின்றது.

தமிழர் தரப்பில் தேசியம் பேசும் கட்சிகள் அந்த விடயத்தையொட்டி ஆளை ஆள் காலை வாரும் அரசியல் காய்நகர்த்தல்களை முன்னெடுக்க, தமிழர் தரப்பில் தேர்தல் கூட்டுகளையே மாற்றியமைக்கும் புதிய அணிகள் உருவாவதற்கு அவை கால்கோல் இடுகின்றன என்பது உண்மை.

அதேசமயம் தென்னிலங்கையிலும் இந்த அமர்வின் விளைவு பற்றிய சிரத்தையும் பதற்றமும் வெளிப்படையாகத் தென்படத் தொடங்கியிருக்கின்றது.

அங்கு – ஜெனிவாவில் – இம்முறை இலங்கை விவகாரம் விவாதப் பொருள் அல்ல. இலங்கை தொடர்பாகத் தனது அவதானிப்பை ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் தமது வாய்மூல அறிவிப்பாக முன்வைப்பார். அதற்கு இலங்கை பதிலளிப்பதுடன் விடயம் முடிந்து விடும். ஆனாலும் ஆணையாளரின் அவதானிப்புக்கள் தொடர்பான வாய்மூல அறிவிப்பு இலங்கை ஆட்சித் தரப்புக்கு மிகக் காட்டமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் எதிரொலிப்பு அடுத்த மார்ச்சில் நடைபெறும் நாற்பத்தியொன்பதாவது அமர்வில் இலங்கை விவகாரம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுகையில் பேரதிர்வுகளை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதனால்தான் இப்போது நடைபெறும் கூட்டத்தொடர் தொடர்பில் பதகளிப்புப் படுகின்றது கொழும்பு. இவ்விடயத்தில் இதுவரைகாலமும் தாங்கள் எடுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் என்ற பெயரில் ஒரு கண்பூச்சு அறிக்கையைக் கடந்த வாரம் கொழும்பில் உள்ள வெளிநாட்டு தூதரகங்களின் பிரதிநிதிகளை அழைத்து முன்வைத்திருக்கிறார் புதிய வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.

இலங்கை விவகாரம் தொடர்பாக ஜெனிவாவில் மேற்குலகம் முன்வைத்து, கடந்த மார்ச்சில் 46 ஆவது கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் எதிர்பார்க்கப்பட்ட அல்லது வலியுறுத்தப்பட்ட விடயங்களில் கொஞ்சத்தையேனும் இலங்கை முன்னெடுக்கவில்லை. ஜெனிவாத் தீர்மானம் எம்மைக் கட்டுப்படுத்தாது, நாங்கள் அதற்குச் சம்மதிக்கவில்லை என்று பௌத்த, சிங்கள இன மேலாண்மை வெறிப் போக்கில் பேசி வந்த கொழும்பு, இப்போது அந்தக் கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் கணிசமானவற்றைத் நாங்கள் நிறைவேற்றி இருக்கின்றோம் என்று கயிறு விட முயல்வது வேடிக்கையிலும் வேடிக்கை.

இலங்கையின் யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் இழைக்கப்பட்ட யுத்தக் குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை மனித உரிமை மீறல்கள் போன்றவை தொடர்பில் சர்வதேச நியமங்களுக்கு ஏற்ப நீதி விசாரணை நடத்தி, உண்மைகளைக் கண்டறிந்து வெளிப்படுத்தி, பொறுப்புக்கூறலை நிலைநாட்டி, இழப்பீடுகளை வழங்கி, மீள நிகழாமையை உறுதிப்படுத்த வேண்டும் என்பதுதான் ஜெனிவாவில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் சுருக்கம்.

இவ்வளவும் செய்தால் காணாமல் ஆக்கப்பட்டோர், படுகொலை செய்யப்பட்டோருக்கு நீதி கிடைப்பதில் இருந்து அரசியல் கைதிகள் விடுதலை வரை எல்லாம் உறுதிப்படுத்தப்படும் என்பது தெளிவு. ஆனால் உண்மைகளைக் கண்டறிந்து, பொறுப்புக்கூறலை நிலைநிறுத்துவதற்கு, பௌத்த சிங்களப் பேரினவாத அரசு தயாரில்லை.

அதுவரையில் வேறு பிற நடவடிக்கைகள் எவற்றையும் இலங்கை செய்தாலும் அவை இந்தத் தீர்மானத்தை நிறைவு செய்வதில் அரை வீத முன்னேற்றத்தைக் கூடக் காட்ட மாட்டா என்பதுதான் நிலைமை.

இது விளங்கியும், இத்தீர்மானத்தை ஒட்டி ஏதோ ஆரவாரமாகப் பல விடயங்களைச் செய்து விட்டோம் என்று காட்ட முயலும் இலங்கையின் நடவடிக்கை சர்வதேசத்தின் பார்வையில் வெறும் அபத்த நாடகமாகவே முடியும் என்பது திண்ணம்.

# மாணவருக்கு தடுப்பூசி செலுத்தாமல் பாடசாலைகளைத் திறக்க முடியுமாம்

## சுவாச நோய் தொடர்பான விசேட வைத்தியர் சன்ன தெரிவிப்பு

இலங்கையில் மாணவர்களுக்கு தடுப்பூசி செலுத்தாமல் பாடசாலைகளை திறக்க முடியும் என ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் சுவாச நோய் தொடர்பான விசேட வைத்தியர் சன்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொரோனா பரிசோதனைகள் குறைவாக மேற்கொள்வதன் காரணமாகவே தொற்றாளர்கள் குறைவடைந்துள்ளனர் என சுகாதார தொழிற் சங்கங்கள் குற்றம் சுமத்தியுள்ளன.

சில வெளிநாடுகளில் செயற்படுத்தப்படும் முறையில் மாணவர்களுக்கு தடுப்பூசி செலுத்தாமல் பாடசாலைகளை ஆரம்பிக்க முடியும் என விசேட வைத்தியர் சன்ன குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாடுகளின் முறையை இலங்கையில் பயன்படுத்தினால் எவ்வித தடையுமின்றி பாடசாலைகளை திறக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்

# மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் கொரோனா விடுதிக்கு பொருள்கள் அன்பளிப்பு





மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசியப் பாடசாலையில் 1984 ஆண்டில் சாதாரண தரம் மற்றும் 1987 உயர் தரம் ஆகியவற்றில் கல்வி கற்ற பழைய மாணவர்களால் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் உள்ள கொரோனா விடுதிக்கு அத்தியாவசிய பொருள்கள் நேற்று (சனிக்கிழமை) காலை கையளிக்கப்பட்டன.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் உள்ள கொரோனா விடுதிக்கு அத்தியாவசிய தேவையான நீர் சுத்திகரிப்பான் ஒன்றும், கிருமி நாசினி தெளிக்கும் கருவிகள் மூன்று ஆகிய உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வசித்து வருகின்ற குறித்த மாணவர்கள் தங்கள் நண்பர்களோடு ஒன்றிணைந்து இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதற்கமைவாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் உள்ள கொரோனா விடுதிக்கு அத்தியாவசியமாக தேவைப்பட்ட நீர் சுத்திகரிப்பான் ஒன்று மற்றும் கிருமி நாசினி தெளிப்பான் மூன்றும் வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தம்பானே பழங்குடி தலைவரின் மனைவி கொவிட்டால் மரணம்



தம்பானே பழங்குடிகளின் தலைவர் ஊருவரிகே வன்னியலத்தோவின் மனைவி ஹீன் மெனிக்கா கொவிட்-19 தொற்று காரணமாக நேற்றைய தினம் காலமானார்.

ஹீன் மெனிக்கா, நிமோனியா காரணமாக மஹியங்கனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் பேராதனை போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு, அங்கு தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை மேற்கொண்டு வந்த நிலையிலேயே அவர் நேற்றிரவு உயிரிழந்துள்ளார்.

ஹீன் மெனிக்கா ஒன்பது பிள்ளைகளின் தாயார் ஆவார்.

அவரும் அவரது குடும்பத்தைச் சேர்ந்த பலரும் கடந்த 29 ஆம் திகதி கொரோனாத் தொற்றுக்குள்ளான நிலையில் மஹியங்கனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

பண்டைய கிராமமான தம்பானே மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் அதிகளவானோர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# சிறுவர்களுக்கு காய்ச்சல் அறிகுறி இருந்தால் உடன் வைத்தியசாலைகளுக்குச் செல்லவும்

இலங்கையில் சிறுவர்களை வைத்திருக்கும் பெற்றோருக்கு விசேட வைத்தியர் எச்சரிக்கை அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளார்.

சிறுபிள்ளைகளுக்கு காய்ச்சல் அறிகுறிகள் இருந்தால் உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் பெற்றோர் அவதானமாக இருக்க வேண்டும் என ரிட்ஜ்வே வைத்தியசாலையின் விசேட வைத்தியர் சன்ன டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

கொவிட் தொற்றியிருந்தாலும் இல்லை என்றாலும் சிறு பிள்ளைகளுக்கு காய்ச்சல் அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக வைத்தியர்களின் ஆலோசனை பெறுவது கட்டாயம் என பெற்றோர்களிடம் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

கொவிட் தொற்றுடன் வைத்தியசாலைகளில் தினசரி அனுமதிக்கப்படும் சிறுவர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பைக் கருத்திற் கொண்டு வைத்தியர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

# ஆப்கானிஸ்தானில் பஞ்ச்ஷீர் எதிர்ப்பால் தலிபான்கள் ஆட்சி அமைப்பதில் சிக்கல்!



ஆப்கானிஸ்தானில் ஆட்சி அமைக்கும் முடிவை 2ஆவது முறையாக தலிபான்கள் ஒத்தி வைத்துள்ளனர். ஓகஸ்ட் 15ஆம் திகதி ஆப்கானிஸ்தான் தலிபான் வசமான நிலையில் ஒப்பந்தத்தின்படி காபூல் விமானநிலையத்தில் இருந்த அமெரிக்கப் படைகள் முழுவதுமாக வெளியேறின. அமெரிக்கப் படைகளின் வெளியேற்றத்தை கொண்டாடிய தலிபான்கள், ஆப்கானிஸ்தானில் ஆட்சி அமைக்கும் நடவடிக்கையில் தீவிரம் காட்டினர். தலிபான்களின் மூத்த தலைவரான முல்லா அப்துல் கனி பரதர் தலைமையில் தலிபான் ஆட்சி நடைபெறும் எனவும், சனிக்கிழமை புதிய நிர்வாகம் ஆட்சிப் பொறுப்பேற்கும் என்றும் தகவல்கள் வெளியாகின.

இதனிடையே தங்களிடம் அடிப்பணிய பஞ்ச்ஷீர் மாகாணம் மட்டும் எதிர்ப்பு தெரிவித்து வருவதால் அதையும் கட்டுக்குள் கொண்டு வரும் முயற்சியில் தலிபான்கள் இறங்கியுள்ளனர். இந்த சூழலில் ஆட்சி அமைக்கும் முடிவு அடுத்த வாரம் ஒத்தி வைக்கப்படுவதாக தலிபான் செய்தி தொடர்பாளர் ஜபியுல்லா முஜாஹித் தெரிவித்துள்ளார். ஆப்கானிஸ்தானில் அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய அரசாங்கத்தை நிறுவுதற்காக, பல்வேறு கட்சிகள், இனக்குழுவினர்களுடன் பேச்சு நடத்தி வருவதால் இந்த தாமதம் என்று கூறப்படுகிறது. சர்வதேச சமூகத்தால் ஏற்றுக் கொள்ள கூடிய விரிவடைந்த கட்டமைப்பை உருவாக்க தலிபான்களின் குழு பஞ்ச்ஷீர் மாகாணத்தில் போராடி வருவதால் ஆட்சி அமைக்கும் முடிவு ஒத்தி வைக்கப் படுவதாக கூறப்பட்டுள்ளது. இதனிடையே, புதிய நிர் வாகத்தில் முக்கிய பதவி மற்றும் பொறுப்புகளில் பெண்களின் பங்கு இருக்கக்கூடாது என்று தலிபான்கள் கருதுவதால், வீதிகளில் இறங்கிய ஆப்கானிஸ்தான் பெண்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

# ஆப்கானிஸ்தானில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ ஐ.நா. திட்டம்



ஆப்கானிஸ்தானில் கடந்த மே மாத இறுதியில் இருந்து அமெரிக்கப் படைகள் ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேற தொடங்கின. அதனைத் தொடர்ந்து கடந்த 15ஆம் திகதி ஆப்கானிஸ்தான் முழுவதுமாக தலிபான்கள் வசம் சென்றது. தலீபான்களின் ஆட்சிக்கு பயந்து ஆயிரக்கணக்கான மக்கள் ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேற முயற்சி செய்து வருகின்றனர்.

இதற்கிடையில் அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட பல நாடுகளும் ஆப்கானிஸ்தானில் சிக்கியிருக்கும் தங்கள் நாட்டு குடிமக்களை விமானங்கள் மூலமாக பாதுகாப்பாக வெளியேற்றும் பணியில் இறங்கின. இறுதியில் அமெரிக்கப் படைகள் கடந்த ஓகஸ்ட் 31 ஆம் திகதி இரவு ஆப்கானிஸ்தானில் இருந்து மொத்தமாக வெளியேறின.

இந்த நிலையில் ஆப்கானிஸ்தானில் குழந்தைகள், பெண்கள், மூத்த குடிமக்கள் உள்ளிட்ட லட்சக்கணக்கான மக்கள் உணவு மற்றும் வாழ்வாதாரம் இன்றி தவித்து வருகின்றனர் எனவும், கடந்த ஓகஸ்ட் 31 ஆம் திகதி அமெரிக்கா மற்றும் நேட்டோ படைகள் ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறியதை அடுத்து நிலைமை இன்னும் மோசமாகி விட்டது என்றும் ஐ.நா. தெரிவித்துள்ளது.

இதையடுத்து ஐ.நா. தலைவர் அன்டோனியோ குட்டரெஸ் உலக நாடுகளிடையே ஆப்கானிஸ்தானுக்கு நிதி திரட்ட ஓர் முக்கிய கூட்டத்தை நடத்த உள்ளார்.

டென்மார்க், கஜகஸ்தான், வடக்கு மாசிடோனியா, பாகிஸ் தான், போலாந்து, கட்டார், ஐக்கிய அரபு அமீரகம், அமெரிக்கா உள்ளிட்ட நாட்டு பிரதிநிதிகளுடன் அவர் இது தொடர்பாக பேச்சு நடத்த உள்ளார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐ.நா. விரைவில் உதவத் திட்டமிட்டு வருகிறது. கடந்த மூன்று மாதங்களாக ஆப்கானிஸ்தானில் தலிபான்கள்வன்முறைபோராட்டத்தில்ஈடுபட்டமையால் தலைநகர் காபூலில் இருந்த ஐநா., தூதரகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


# அமீரகம் நிலவு பயணத் திட்டம்; பணிகள் தீவிரமாக முன்னெடுப்பு

அமீரகத்தின் சார்பில் டுபாய் முகம்மது பின் ராஷித் விண்வெளி மையத்தில் நிலவில் சென்று ஆராய்ச்சி செய்யும் ராஷித் ரோவர் வாகனம் தயார் செய்யப்பட்டு வருகிறது. இந்த வாகனம் ஸ்பேஸ் எக்ஸ் ரொக்கெட் மூலம் வரும் ஆண்டில் விண்ணில் ஏவப்பட உள்ள நிலையில் நிலவில் தரையிறங்கும் முதற்கட்ட பகுதியானது தேர்வு செய்யப்பட்டுள்ளது. தேர்வு செய்யப்பட்டுள்ள நிலவின் நிலப்பரப்புக்கு இலத்தீன் மொழியில் ‘லாகஸ் சோம்னியோரம்’ என்று பெயரிடப்பட்டுள்ளது. இது லேக் ஆப் டிரீம்ஸ் என்ற ஆங்கில பெயரால் அழைக்கப்படுகிறது. இது நிலவின் முன் பகுதியில் அமைந்துள்ள இடமாகும். கரடு முரடாக இல்லாமல் இருப்பதன் காரணமாக இந்த இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. ஒருவேளை இந்தப் பகுதியில் தரையிறங்க முடியாவிட்டால் மாற்று ஏற்பாடாக இன்னும் 3 இடங்கள் தேர்வு செய்து வைக்கப்பட்டுள்ளன.

**3 மாதங்கள் விண்ணில் பயணம்**

தற்போது மாதிரி ராஷித் ரோவர் வாகனத்தின் செயல்பாடுகளின் சோதனைகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளன. ஜப்பான் நாட்டின் ஐ ஸ்பேஸ் நிறுவனம் சார்பில் ‘ஹக்குட்டோ–ஆர்’ என்ற லேண்டர் வாகனம் உருவாக்கப்பட்டு வருகிறது. இந்த லேண்டர் வாகனம்தான் ராஷித் ரோவரை சுமந்து சென்று தரையிறக்குகிறது. அடுத்த ஆண்டில் (2022) ஓகஸ்ட் மற்றும் நவம்பர் மாதங்களுக்கு இடையில் அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து ஸ்பேஸ் எக்ஸ்– பால்கன் 9 என்ற ரொக்கெட் மூலம் ரோஷித் ரோவர் லேண்டர் விண்ணுக்கு அனுப்பப்பட உள்ளது. இதில் அடுத்த ஆண்டு விண்ணில் ஏவப்படும் ராஷித் ரோவர் 3 மாதங்கள் விண்ணில் பயணம் செய்து நிலவை அடையும். இவ்வாறு அவர் கூறினார்.





# பஞ்ச்ஷீர் மாகாண மோதல் 600 தலிபான்கள் உயிரிழப்பு

## எதிர்ப்புக் குழு தகவல்

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் வெளியேற தொடங்கிய ஓரிரு வாரங்களிலேயே தலிபான் பயங்கரவாதிகள் முழு ஆப்கானிஸ்தானையும் தங்கள் வசம் ஆக்கினார். கடந்த மாதம் 15ஆம் திகதி தலைநகர் காபூலை அவர்கள் கைப்பற்றியமையை தொடர்ந்து, அதிபர் அஷ்ரப் கனி நாட்டை விட்டு தப்பி ஓடினார்.

இதைத்தொடர்ந்து 20 ஆண்டு கால போர் முடிவுக்கு வந்ததாக அறிவித்த தலிபான்கள் தங்களது தலைமையில் நாட்டில் புதிய அரசு அமையும் என தெரிவித்தனர். தற்போது ஆப்கானிஸ்தானிலிருந்து சர்வதேசப் படைகள் முழுமையாக வெளியேறி விட்ட நிலையில் புதிய அரசை அமைப்பதில் தலிபான்கள் தீவிரம் காட்டி வருகின்றனர்.

அதேவேளையில் ஆப்கானிஸ்தானில் மொத்தம் உள்ள 34 மாகாணங்களில் 33 மாகாணங்களை தலிபான்கள் கைப்பற்றிய போதும் இந்துகுஷ் மலைத் தொடருக்கு அருகில் உள்ள பஞ்ச்ஷீர் மாகாணத்தை மட்டும் அவர்களால் கைப்பற்ற முடியாத நிலை இருந்தது. சுமார் 2 லட்சம் பேர் வாழும் பஞ்ச்ஷீர் மாகாணம் நீண்ட காலமாகவே தலிபான்களுக்கு எதிராக போராடி வருகிறது. இந்த மாகாணம் இப்போது அல்ல எப்போதுமே ஆதிக்ககாரர்களிடம் அடிபணிந்தது இல்லை.

1980களில் அரச படைகளுக்கு எதிராகவும் 1990களில் தலிபான்களுக்கு எதிராகவும் பஞ்ச்ஷீர் மாகாண போராளிகள் சண்டையிட்டனர். அந்த வகையில் தற்போதும் ஆப்கானிஸ்தானின் இடைக்கால அதிபராக தன்னைத் தானே அறிவித்துக் கொண்டுள்ள துணை அதிபர் அமருல்லா சாலே தலைமையில் பஞ்ச்ஷீர் போராளிகள் தலிபான்களுடன் சண்டையிட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், சண்டையில் தலிபான்கள் தரப்பில் 600 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என பஞ்ச்ஷீர் போராளிகள் குழு அறிவித்துள்ளது. ஆயிரத்திற்கும் மேற்பட்ட தலிபான்கள் பிடிபட்டுள்ளனர் அல்லது சரண் அடைந்துள்ளார் எனவும் போராளிகள் குழு தெரிவித்துள்ளது. அதே வேளையில், பஞ்ச்ஷீர் மாகாணத்தை கைப்பற்றும் முயற்சி தொடர்ந்து நடப்பதாக தலிபான்கள் வட்டாரம் தெரிவித்துள்ளது. தலைநகர் பசா ரக் செல்லும் சாலையில் கண்ணி வெடிகள் அதிக அளவில் இருக்கின்றமையால், முன்னேறிச்செல்லும் பணியில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தலிபான் வட்டாரங்கள் கூறியுள்ளன.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# பெண்களுக்கெதிரான வன்முறைகள் திகிலூட்டுகின்றன காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோதிமணி கருத்து



டெல்லியில் ரஃபியா சைஃபி என்ற பெண் காவல் அதிகாரி, கூட்டு பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டதுடன் படுகொலையும் செய்யப்பட்டார். இந்தப் படுகொலையைக் கண்டித்து பலரும் டுவிட்டர், பேஸ்புக் போன்ற சமூகவலைத்தளங்களில் JusticeForRabiya என்ற ஹாஸ்டக்கில் பதிவிட்டு வருகின்றனர். இந்த நிலையில் காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோதிமணியும், ரஃபியாவின் படுகொலைக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக ஜோதிமணி வெளியிட்ட பேஸ்புக் பதிவில், "ரஃபியா ஒரு சிவில் பாதுகாப்பு அதிகாரி. கூட்டுபாலியல் வன்புணர்வு செய்யப்பட்டு, மார்பகங்கள் வெட்டப்பட்டு, தொண்டை அறுக்கப்பட்டு, அந்தரங்க உறுப்புகள் சிதைக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்கிற செய்தியைப் படிக்கவே பயங்கரமாக உள்ளது.

அவர் டெல்லி லாஜ்பத்நகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பணியாற்றினார். அங்கு நடக்கும் ஊழலை அவர் வெளிக்கொண்டு வராமல் தடுக்க இப்படி நடந்திருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இந்த கொடூரமான குற்றவாளிகள் உடனடியாக விரைவு நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டு தூக்கிலிடப்பட வேண்டும்.

பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் அச்சமூட்டும்அளவிற்கு அதிகரித்துக்கொண்டேசெல்கின்றன. இதைத் தடுப்பதற்கு ஆரம்பக் கல்வி முதலே பெண்களுக்கான சமத்துவம், மரியாதை, பெண்கள் வெறும் உடல் அல்ல என்பது பற்றியெல்லாம் குழந்தைகளுக்கு போதிக்க வேண்டும். குற்றவாளிகளை விரைவாக விசாரித்து கடுமையாகத் தண்டிக்க வேண்டும்.

பாலியல் குற்றவாளிகளைத் தண்டிப்பதோடு மட்டுமல்லாமல் பாலியல் குற்றவாளிகளை மனசாட்சியில்லாமல் காப்பாற்ற முயற்சிப்பதும், பொதுவெளியில் ஆதரிப்பதும் தண்டனைக்குரிய குற்றமாக கருதப்பட வேண்டும். சமூகம் இதுபோன்ற ஆபத்தான நபர்களைப் புறக்கணிக்க வேண்டும். அப்பொழுதுதான் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் குறையும்" என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பிளிப்கார்ட் நிறுவனரின் எதிர் மனுவுக்கு பதிலளிக்க உயர்நீதிமன்றம் உத்தரவு




2009 முதல் 2015 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் பிளிப்கார்ட் நிறுவனம் அந்நியச் செலாவணி மோசடித் தடுப்புச்சட்டத்தை மீறி வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்துள்ளதாக இந்திய அமுலாக்கத்துறை குற்றச்சாட்டு எழுப்பியது. இது தொடர்பாக பிளிப்கார்ட் நிறுவனத்துக்கும் அதன் நிறுவனர்கள் உட்பட 9 பேருக்கும் அமுலாக்கத் துறை நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

நோட்டீஸை எதிர்த்து, பிளிப்கார்ட் நிறுவனர்களில் ஒருவரான சச்சின் பன்சால் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். சென்னை அமுலாக்கப்பிரிவு இந்த நோட்டீஸை அனுப்பியதால் இவர் சென்னை உயர்நீதிமன்றத்தை அணுகியிருந்தார்.

அவர் தனது மனுவில், பிளிப்கார்ட் நிறுவனத்திலிருந்து 2010 ஆம் ஆண்டே தான் விலகிவிட்டேன் எனவும் தனக்கும் தற்போது அந்த நிறுவனத்துக்கும் தொடர்பு ஏதும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தவழக்கில்மூன்றுவாரங்களில் பதிலளிக்க அமுலாக்கத்துறைக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## 'நல்ல உடல் நலத்துடன் உள்ளேன்' என தெரிவித்து டுபாயிலிருந்து டுவிட்டரில் பதிவிட்ட விஜயகாந்த்

தே.மு.தி.க. நிறுவனரும் பொதுச்செயலாளருமான விஜயகாந்த் மருத்துவ சிகிச்சைக்காக கடந்த ஓகஸ்ட் 30 ஆம் திகதி தனது இளைய மகன் சண்முக பாண்டியன் மற்றும் இரு உதவியாளர்களுடன் டுபாய்க்குப் புறப்பட்டுச் சென்றார். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுவருகிறது.

டுபாயில் சிகிச்சை பெற்றுவரும் விஜயகாந்தின் படம் அவரது டுவிட்டர் பக்கத்தில் வெளியாகியுள்ளது. அதில், "நான் நல்ல உடல் நலத்துடன் உள்ளேன். நான் நடித்த 'சத்ரியன்' திரைப்படத்தை, எனது சிகிச்சைக்கு உதவிபுரியும் செவிலியர் சகோதரிகளுடன் பார்த்தபோது எடுத்த படம்" என குறிப்பிடப்பட்டுள்ளது.

கடவுச் சீட்டுச் சிக்கலால் விஜயகாந்துடன் பயணப்படமுடியாதுபோயிருந்த அவரது துணைவியார் பிரேமலதாவும் அந்தச் சிக்கல் தீர்ந்து அங்கு புறப்பட்டுச் சென்றிருக்கிறார் என தகவல்கள் வெளியாகியிருந்தன. விஜயகாந்துக்கு சிகிச்சை முடிந்து இந்த மாத இறுதியில்சென்னைதிரும்புவார்எனகூறப்படுகிறது.



## தமிழக சுகாதார அமைச்சர் சுப்பிரமணியனால் மத்திய அமைச்சரிடம் கோரிக்கைகள் முன்வைப்பு



தமிழகத்தின் பல்வேறு கோரிக்கைகளுடன் டெல்லி சென்ற அமைச்சர் மா.சுப்பிரமணியன், மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியாயைச் சந்தித்து பேசினார். அப்போது, தமிழகத்தில் 25 ஆரம்ப சுகாதார நிலையங்களை தொடங்கவும் செங்கல்பட்டு, நீலகிரி ஆகிய இடங்களில் தடுப்பூசி உற்பத்தி மையங்களை செயல்படுத்தவும் அவர் கோரிக்கையை முன்வைத்திருக்கிறார்.

அதே போல், மதுரை எய்ம்ஸ் கட்டுமானப் பணிகளை விரைந்து தொடங்கவும், கோவையில் புதிதாக எய்ம்ஸ் கல்லூரியை நிறுவுமாறும் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கேட்டுக்கொண்டுள்ளார். மேலும், தமிழகத்தில் புதிதாக தொடங்கப்பட்டுள்ள 11 மருத்துவக் கல்லூரிகளில், இந்த ஆண்டே மாணவர் சேர்க்கையைத் தொடங்கவும் அவர் கோரினார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதன் பின்னர் சென்னை திரும்பிய அமைச்சர் மா.சுப்பிரமணியன், நீட் தேர்வு ரத்து தொடர்பாக தேர்தலின் போது தி.மு.க. அளித்த வாக்குறுதி குறித்து ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தார். இதன்போது, தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் அடுத்த நாளே நீட் தேர்வில் இருந்து விலக்கு பெற்றுத்தருவோம் என்று வாக்குறுதி அளித்ததாக எதிர்க்கட்சிகள் பொய்யான அறிவிப்புகளை செய்து கொண்டிருக்கின்றன என மருத்துவத்துறை அமைச்சர் மா.சுப்ரமணியன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

## இந்தியாவில் புதிதாக 42,766 பேருக்கு கொரோனாத் தொற்று அடையாளம்



இந்தியாவில் கொரோனாவின் இரண்டாவது அலை பரவல் கணிசமாக குறைந்து வந்ததெனினும் கடந்த சில நாள்களாக பாதிப்பு மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளதைத் தரவுகள் காட்டுகின்றன. இந்திய மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள தகவலின் அடிப்படையில், இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக 42,766 பேருக்கு தொற்று பாதிப்பு உறுதியாகியுள்ளது. இதில் 29,682 பேர் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்.

தொற்று பாதிப்புகளுக்கு நாடு முழுவதும் ஒரே நாளில் 308 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதன் மூலம் உயிரிழந்தோர் மொத்த எண்ணிக்கை 4,40,533 ஆக உயர்ந்துள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் கொரோனாப் பாதிப்பிலிருந்து 38,091 பேர் குணமடைந்துள்ளனர். இதன்மூலம் குணமடைவோர் வீதம் 97.42 ஆக உயர்ந்துள்ளதாக அறியமுடிகிறது.

## அடுத்தகட்ட பாடசாலைகள் திறப்பு; செப்டெம்பர் 8 இற்குப் பின் முடிவு

*1 முதல் 8 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு மீண்டும் பாடசாலைகளை ஆரம்பிப்பது குறித்து செப்டெம்பர் 8 ஆம் திகதிக்குப் பிறகு முடிவு செய்யப்படும் என்று அமைச்சர் அன்பில் மகேஷ் தெரிவித்தார்.*

*தமிழகத்தில் கொரோனா நோய்ப் பரவல் காரணமாக மூடப்பட்டிருந்த பாடசாலைகள் மற்றும் கல்லூரிகள் கடந்த முதலாம் திகதிமுதல் திறக்கப்பட்டு, 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை செயல்பட்டு வருகின்றன. இந்த நிலையில் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு பாடசாலைகளைத் திறப்பது குறித்து அமைச்சரிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியபோது, செப்டெம்பர் 8 ஆம் திகதிக்குப் பிறகு முதல்வருடன் ஆலோசித்து முடிவு எடுக்கப்படும் என்று அமைச்சர் அன்பில் மகேஷ் தெரிவித்தார்.*



# நியூசிலாந்தில் சுட்டுக்கொல்லப்பட்டவர்; பல கோணங்களில் விசேட விசாரணைகள்

நியூசிலாந்தின் ஒக்லன்ட் நகரை அண்மித்த பல்பொருள் அங்காடி ஒன்றில் பயங்கரவாதத் தாக்குதல் நடத்திய இலங்கையர் அந்நாட்டு பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ள நிலையில், அந்த நபர் தொடர்பில் இலங்கையிலும் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

குறிப்பாக இரு வேறு சிறப்புக் குழுக்கள் பல் கோணங்களில் இந்த விசாரணைகளை முன்னெடுத்துள்ளன என உயர் மட்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எஸ்.ஐ.எஸ். எனப்படும் தேசிய உளவுச் சேவை ஊடாக தனியான விசாரணையும் பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவு, சி.ஐ.டி. எனப்படும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் ஆகியவற்றுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபரின் கீழ் தனியான ஒருங்கிணைந்த விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருவதாக அறிய முடிகிறது.

அதன் பிரகாரம் நியூசிலாந்தின் ஒக்லன்ட் பகுதியில் உள்ள பல்பொருள் அங்காடியில் நுழைந்த குறித்த இலங்கையர், மொஹம்மட் சம்சுதீன் அஹமட் ஆதில் எனும் 32 வயதான இலங்கையர் என உள்நாட்டு அதிகாரிகள் கண்டறிந்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த நபரின் உறவினர்கள் சிலரிடம், நியூசிலாந்தில் சம்பவம் இடம்பெற்று 24 மணி நேரத்துக்குள்ளேயே சிறப்பு புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் விசாரணை செய்து வாக்கு மூலங்களை பதிவு செய்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின், காத்தான்குடி மற்றும் தலைநகர் கொழும்பில் வசித்துள்ள குறித்த தாக்குதல்தாரி கடந்த 2011 ஆம் ஆண்டு நியூசிலாந்துக்கு சென்றுள்ளமையும் அங்கு அவர் தனியாகவே வசித்து வந்துள்ளார் எனவும் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறான நிலையில், கடந்த 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி இலங்கையில் நடத்தப்பட்ட தொடர் தற்கொலை குண்டுத் தாக்குதல்களில் ஈடுபட்ட அல்லது அதனுடன் தொடர்புபட்ட நபர்களுடன் குறித்த சந்தேக நபருக்கு ஏதும் தொடர்புகள் இருந்தனவா எனவும் பிரத்தியேக விசாரணைகளில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

கடந்த 10 வருடங்களாக குறித்த இலங்கையர் நியூசிலாந்தில் வசித்து வந்துள்ளார். 5 வருடங்களாக அந்த நபரை நியூசிலாந்தின் பாதுகாப்பு தரப்பினர் கண்காணித்து வந்துள்ளனர்.

ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாத குழுவினரை பின்தொடர்ந்துள்ள இந்த இலங்கையர் கடந்த 2011 ஆம் ஆண்டில் நியூசிலாந்து சென்றுள்ளார் என இலங்கையின் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு உறுதி செய்தது. அவர் தொடர்பில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் மேலதிக விடயங்களை தற்போதைக்கு வெளிப்படுத்த முடியாது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

நியூசிலாந்தின், மேற்கு ஒக்லான்ட் நகரில் நியூலின் பகுதியில் உள்ள ஆஸ்திரேலிய நிறுவனத்துக்குச் சொந்தமான ‘கவுன்ட் டவுன்’ எனும் பல்பொருள் அங்காடியில் நியூசிலாந்து நேரப்படி 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.45 மணியளவில் இந்த கத்திக் குத்து பயங்கரவாத தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

கத்திக்குத்து தாக்குதலை ஆரம்பித்த 60 விநாடிகளில் தாக்குதல்தாரி பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டார் என நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டன் தெரிவித்துள்ளார்.

வெறுக்கத்தக்க, தவறான இந்த செயலை செய்த நபர் மாத்திரமே இந்தத் தாக்குதலுக்கு பொறுப்பாளியாவார் என ஜெசிந்தா ஆர்டன் சம்பவத்தின் பின்னர் ஊடகங்களிடம் குறிப்பிட்டார். குறித்த நபர் இலங்கையைச் சேர்ந்த அடிப்படை வாத செயற்பாடுகளில் ஈடுபடும் ஒருவர் என நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டன் உறுதி செய்திருந்தார்.

இந்நிலையில் இந்த விவகாரம் தொடர்பிலான விசாரணைகளுக்கு நியூசிலாந்துக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் என இலங்கையின் வெளிவிவகார அமைச்சின் செயலர் ஓய்வு பெற்ற அட்மிரல் ஜயநாத் கொலம்பகே



தெரிவித்தார். நியூசிலாந்து கோரும் விடயங்களை அவர்களுடன் பகிர்ந்து கொள்ள தயார் என அவர் தெரிவித்தார்.

1989 ஆம் ஆண்டு பிறந்துள்ள தாக்குதல்தாரி, 8 வயதுவரை மட்டக்களப்பு – காத்தான்குடி பகுதியில் வசித்துள்ளமையுடன் அதன் பின்னர் 1998 ஆம் ஆண்டு கொழும்புக்கு இடம்பெயர்ந்துள்ளர் என இதுவரையான புலனாய்வு தகவல்கள் ஊடாக அறிய முடிகின்றன. 4 பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் கடைக்குட்டியான தாக்குதல்தாரி, ஆரம்பத்தில் மட்டக்களப்பிலும் பின்னர் கொழும்பிலும் இருவேறு பிரபல பாடசாலைகளில் கல்வி கற்றுள்ளதுடன் உயர் தர பரீட்சை எழுதி 5 ஆண்டுகளின் பின்னர் நியூசிலாந்து சென்றுள்ளார்.

அவரது ஏனைய சகோதர, சகோதரிகள் வெளிநாடுகளிலேயே வசிக்கும் நிலையில் தற்போது காத்தான்குடி பகுதியில் அவரது தாயார் மட்டும் வசிக்கிறார் என தெரிவித்த உயர் பொலிஸ் அதிகாரி, அவரிடம் சம்பவத்தின் பின்னர் குறித்த தாக்குதல்தாரி தொடர்பில் விசாரிக்கப்பட்டதாக சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் குறித்த நபர் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவு ஆகியவற்றுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபரின் கீழ் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. அத்துடன் தேசிய உளவுச் சேவையும் பிரத்தியேக விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

2011 ஆம் ஆண்டு நியூசிலாந்துக்கு சென்றுள்ள தாக்குதல்தாரி, அங்கு இரு சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்டுள்ளார் என தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

உடைமையில் கத்தி ஒன்றை வைத்திருந்தமை, பிரான்ஸ் மற்றும் பிரசல்ஸ் பயங்கரவாத தாக்குதல்கள் தொடர்பில் ஆதரவுக் கருத்துக்களை வெளிப்படுத்தி பேஸ்புக்கில் பதிவிட்டுள்ளமை, ஐ.எஸ்.ஐ.எஸ். தாக்குதல் முறைமைகள் தொடர்பிலான காணொலிகளை வைத்திருந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் அவர் மீதுள்ளன.

இந்நிலையிலேயே அவருக்கு எதிராக வழக்கும் தொடரப்பட்டு, ஒரு வழக்கில் போதிய ஆதாரம் இன்மையால் விடுவிக்கப்பட்டுள்ளார்.

பின்னர் ஒரு முறை சிங்கப்பூருக்கு அவர் செல்ல முற்பட்டபோது, ஐ.எஸ் .ஐ.எஸ். அமைப்பில் இணைய செல்வதாக கருதி ஒக்லன்ட் விமான நிலையத்தில் வைத்து அந்நாட்டு பொலிஸார் அவரை கைது செய்து தடுத்துள்ளனர்.

இவ்வாறான நிலையிலேயே குறித்த தாக்குதல்தாரியை ‘ எஸ்.’ எனும் எழுத்தினால் அடையாளப்படுத்தும் நியூசிலாந்தின் 24 மணி நேரமும் ஆயுதம் தரித்த பயங்கரவாத எதிர்ப்பு படையணியின் வீரர்கள் ஊடாக கண்காணித்துள்ளது. 2016 முதல் இந்தக் கண்காணிப்பு இடம்பெற்றுள்ளதாக சர்வதேச பயங்கரவாத விவகார நிபுணரான பேராசிரியர் ரொஹான் குணரத்ன தெரிவித்துள்ளார்.

இதனிடையே கடந்த 2020 ஆம் ஆண்டு பெப்ரவரி 2 ஆம் திகதி லண்டனில் கத்திக் குத்து பயங்கரவாத நடவடிக்கைகளை முன்னெடுத்த சுதேஷ் அம்மான் எனும் பயங்கரவாதிக்கும், நியூசிலாந்தின் தாக்குதல்களை முன்னெடுத்த நபருக்கும் இடையில் தொடர்புகள் இருந்தனவா எனவும் விசாரணைகள் இடம்பெறுகின்றன என அறிய முடிகிறது. லண்டன் தாக் குதலுடன் தொடர்புடைய தாக்குதல்தாரியும் இலங்கை வம்சாவழியைச் சேர்ந்தவராக இருந்தமை இதற்கான முக்கிய காரணியாக கூறப்படுகிறது.



## கல்முனை கடலில் 12 அடி நீளமான கொப்புறா மீன் ஒன்று சிக்கியது

கல்முனை கடலில் மீனவர் ஒருவரின் வலையில் 12 அடி நீளமான கொப்புறா மீன் ஒன்று இன்று சிக்கியுள்ளது.

இந்த மீனின் பெறுமதி சுமார் மூன்று லட்சம் ரூபா என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். இதேவேளை, குறித்த மீன் வியாபாரியின் வலையில் சுமார் 50 கிலோ கிராம் எடையுள்ள திருக்கை இன மீன் ஒன்றும் பிடிபட்டது.

தற்போது கல்முனை கடற்கரையில் கரை வலை மற்றும் ஆழ்கடல் மீன்பிடி என்பன தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

மீனவர்கள் மீன் பிடிப்பதற்கும், பிடித்த மீன்களை சுகாதார சட்ட விதி முறைகளை பின்பற்றி விற்பனை செய்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நிந்தவூரில் சேதனப் பசளை உற்பத்தியை ஊக்குவிக்கும் வேலைத்திட்டம் ஆரம்பம்

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு தேசிய வேலைத்திட்டத்தின் ஊடாக நாடு தழுவிய ரீதியில் விவசாயத் துறையில் முழுமையாக சேதன உரப் பயன்பாட்டை உறுதிப்படுத்தும் வகையில் சேதனப் பசளை உற்பத்தியை ஊக்குவிக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் விவசாயிகளினால் சேதன பசளை தயாரிக்கும் முயற்சி சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் குறித்த செயற்பாடுகளை நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எம். அப்துல் லத்தீப் தலைமையிலான பிரதி திட்டமிடல் பணிப்பாளர் சுல்பிகார், சமுர்த்தி முகாமையாளர், கிராம உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச சபை உறுப்பினர் அடங்கிய குழு மேற்கொண்டு சேதன உர உற்பத்தி மற்றும் பயன்பாட்டுக்கான மேலதிக ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





## தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் 5,000 ரூபா நிவாரணப் பொதி வழங்கி வைப்பு

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் அங்கத்துவம் வகிக்கும் மாவட்ட, பிரதேச சம்மேளனங்களில் உள்ள பிரதிநிதிகளுக்கு உலருணவு வழங்கும் நிகழ்வு நேற்று காலை சாய்ந்தமருது இளைஞர் பயிற்சி நிலையத்தில் அம்பாறை மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி ஏ. முபாரக் அலியின் தலைமையில் இடம்பெற்றது.

கடந்த காலங்களில் கொரோனாத் தொற்றில் பாதிக்கப்பட்டு 14 நாள்கள் தனிமைப்படுத்தலில் இருந்த குடும்பங்களில் வசிக்கும் மாவட்ட, பிரதேச சம்மேளனங்களில் அங்கத்துவம் வகிக்கும் இளைஞர்களுக்கே இந்த 5,000 ரூபாய் மதிப்புள்ள உலருணவுகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அம்பாறை மாவட்ட உதவிப் பணிப்பாளர் டபுள்யு.ஏ. ஜீ.எஸ். தமயந்தி, அம்பாறை இளைஞர் மத்திய நிலைய பொறுப்பதிகாரி அஜித் சேனவிரத்ன, கல்முனை வடக்கு உப பிரதேச செயலக இளைஞர் சேவை அதிகாரி டீ. மோகன்ராஜ், நிஸ்கோ பணிப்பாளர் சபை முன்னாள் பணிப்பாளர் யூ. எல்.என். ஹூதா உமர், தேசிய சம்மேளன பிரதிநிதி சிப்னாஸ் அஸீஸ் உட்பட இளைஞர், யுவதிகள் பலரும் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இரண்டாவது போட்டியில் இலங்கையை வீழ்த்தியது தென்னாபிரிக்க அணி




இலங்கை மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்க அணி டக்வொர்த் லூயிஸ் முறையில் 67 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட தொடரை 1-1 என தென்னாபிரிக்கா சமநிலைப்படுத்தியது.

இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள்சர்வதேசத்தொடரில்விளையாடி வருகின்றது. இரு அணிகளுக்கு மிடையில் நடைபெற்ற முதலாவது ஒருநாள் போட்டியில் இலங்கை அணி 14 ஓட்டங்களால் வெற்றிபெற்று தொடரில் 1-0 என முன்னிலை பெற்றிருந்தது.

இரண்டாவது ஒருநாள் போட்டி நேற்று கொழும்பில் நடைபெற்றது. மழை காரணமாக அணிக்கு தலா 47 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 47 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 283 ஓட்டங்களைப் பெற்றது. ஜனெமன் மலன் 121 ஓட்டங்களையும் ஹென்ட்ரிக்ஸ் 51 ஓட்டங்களையும் எடுத்தனர். இலங்கை அணியின் துஷ்மந்த சமீர மற்றும் சமிக்க கருணாரத்ன ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர். இதனைத் தொடர்ந்து 47 ஓவர்களில் 284 என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இலங்கை அணி, 25 ஓவர்களில் 114 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் மீண்டும் மழை குறுக்கிட்டது. இதன் பின்னர் டக்வொர்த் லூயிஸ் முறையில் போட்டி 41 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டு, இலங்கை அணியின் வெற்றியிலக்கு 265 ஓட்டங்களாக நிர்ணயிக்கப்பட்டது. ஆயினும் இலங்கைஅணி 36.4 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 197 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 67 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. சரித் அசலங்க 77 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார். தென்னாபிரிக்க அணியின் தப்ரஸ் ம்ஸி 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். போட்டியின் சிறப்பாட்டக்காரர் விருது ஜனெமன் மலனுக்கு வழங்கப்பட்டது.




இரு அணிகளுக்குமிடையிலான மூன்றாவதும் தொடரின் வெற்றியாளரைத் தீர்மானிப்பதுமான போட்டி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

# அமெரிக்க ஓபன் டென்னிஸ் 3 ஆவது சுற்றில் நவோமி ஓசாகா அதிர்ச்சித் தோல்வி



பெண்கள் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்று ஆட்டமொன்றில் நடப்பு சம்பியனும், தரவரிசையில் மூன்றாவது இடத்தில் இருப்பவருமான ஜப்பான் வீராங்கனை நவோமி ஒசாகா, 73 ஆம் நிலை வீராங்கனையான கனடாவின் 18 வயது லேலா பெர்னாண்டசை எதிர்கொண்டார்.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் முதல் செட்டை கைப்பற்றிய ஒசாகா இரண்டாவது செட்டை டைபிரேக்கரில் பறிகொடுத்தார். அடுத்த செட்டில் மிக உத்வேகத்துடன் செயல்பட்ட லேலா பெர்னாண்டஸ் அதனைக் கைப்பற்றியதுடன் பட்டத்தைத்தக்கவைக்கும்ஒசாகாவின்எண்ணத்தையும் உடைத்தார்.

சுமார் 2 மணித்தியாலங்களுக்கு நீடித்த இந்த ஆட்டத்தில் லேலா பெர்னாண்டஸ் 5-7, 7-6 (7-2), 6-4 என்ற செட் கணக்கில் நவோமி ஒசாகாவுக்கு அதிர்ச்சி அளித்து நான்காவது சுற்றுக்கு முன்னேறினார்.

தோல்விக்கு பிறகு நவோமி ஒசாகா கண்ணீர் மல்க, இந்தத் தோல்வி குறித்து வார்த்தைகளால் விவரிப்பது மிகவும் கடினம். இந்தச் சூழ்நிலையில் இருந்து மீள என்ன செய்ய வேண்டும் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டிய நிலையில் இருப்பதாக உணர்கிறேன் என்று தெரிவித்தார்.

மன அழுத்தம் காரணமாக கடந்த மே மாதம் நடந்த பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டியின் இரண்டாவது சுற்றில் இருந்து நவோமி ஒசாகா விலகியிருந்தார். அடுத்து நடந்த விம்பிள்டன் போட்டியிலும் பங்கேற்காமல் ஒதுங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் ரவி சாஸ்திரிக்கு கொரோனாத் தொற்று




இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் ரவி சாஸ்திரிக்கு கொரோனாத் தொற்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்திய அணி இங்கிலாந்தில் தற்போது ஐந்து டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இன்று நான்காவது டெஸ்ட்டின் நான்காவது நாள் ஆட்டம் நடைபெறும் நிலையில் இந்தச் செய்தியை இந்திய கிரிக்கெட் கட்டுப் பாட்டுச்சபை உறுதிப் படுத்தியுள்ளது.

தினமும் காலையும் மாலையும் அவர்களாகவே மேற்கொள்ளக்கூடிய தொற்றுப் பரிசோதனையை நேற்று மாலை மேற்கொண்டபோதே பயிற்சியாளர் ரவி சாஸ்திரிக்கு தொற்று ஏற்பட்டிருப்பது அடையாளம் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. அவருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ள நிலையில் அவருடன் தொடர்பில் இருந்த மூன்று பயிற்சியாளர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இந்திய அணியின் பந்து வீச்சுப் பயிற்சியாளர் அருண், களத்தடுப்புப் பயிற்சியாளர் ஸ்ரீதர், உடற்பயிற்சியாளர் நிதின் பட்டேல் ஆகியோரே மற்றைய மூவருமாவர்.

இந்திய அணி வீரர்களுக்கு இன்று காலையில் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனைகளில் எவரும் தொற்றுடன் அடையாளம் காணப்படாத நிலையில் போட்டி தொடர்ந்து நடைபெற அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# வெளிநாட்டு ஆடுகளத்தில் முதல் சதம் ரோகித் சர்மா அருமையான ஆட்டம்

இந்திய கிரிக்கெட் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ரோகித் சர்மா இங்கிலாந்து அணிக்கெதிரான நான்காவது போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸில் 127 ஓட்டங்களை எடுத்தார். இந்தியாவில் நடைபெற்ற டெஸ்ட் போட்டிகளில் 7 சதங்களை அடித்துள்ள நிலையில், வெளிநாட்டு மண்ணில் அவர் எடுத்த முதல் டெஸ்ட் சதம் இதுவாகும்.

தனது 43 ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடி வரும் ரோகித் சர்மா, டெஸ்ட் போட்டிகளில் மூவாயிரம் ஓட்டங்களைக் கடந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.




# அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடரில் நான்காவது சுற்றில் ஜோகோவிச்

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடர் நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த மூன்றாவது சுற்று ஆட்டத்தில் உலகின் முதல் நிலை வீரரான செர்பியாவைச் சேர்ந்த நோவக் ஜோகோவிச்சும், ஜப்பானைச் சேர்ந்த நிஷிகோரியும் மோதினார்கள். முதல் செட்டை 7-6 என நிஷிகோரி கைப்பற்றினார்.


சுதாகரித்துக் கொண்ட ஜோகோவிச், இரண்டாவது செட்டை 6-3, மூன்றாவது செட்டை 6-3 , நான்காவது செட்டை 6-2 என தொடர்ந்து கைப்பற்றி அசத்தினார். இறுதியில், ஜோகோவிச் 6-7, 6-3, 6-3, 6-2 என்ற செட் கணக்கில் வென்று நான்காவது சுற்றுக்கு முன்னேறினார்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கேடு களைந்து நாடு காக்க வா சண்முகா!



கடந்த வருடம் (2020) கொரோனாப் பெருந்தொற்று அபாயத்தின் மத்தியிலும் சண்முகனே கதி என்று அலைகடலாய்ச் சரணடைந்த பக்தர் வெள்ளத்தில் தேர் அசைந்தாடி வந்த காட்சி



ஈழத்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா நாள் இன்றாகும். கடந்த மாதம் 13 ஆம் திகதி - ஆடி அமாவாசை தினத்தின் ஆறாவது நாளன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய மஹோற்சவம் நாளை தீர்த்தோற்சவம் மற்றும் கொடியிறக்கத்துடன் நிறைவு காணவிருக்கிறது. நாளை மறுதினம் திருக்கல்யாண - பூங்காவனத் திருவிழாவும், மறுநாள் இடம்பெறும் வைரவர் உற்சவமும் மேலதிக சேர்க்கைகள். இவையிரண்டும் 25 நாள்களைக் கொண்ட மஹோற்சவ காலத்தினுள் அடக்கப்படுவதில்லை.

தமிழர் தம் பண்பாட்டின் அடையாளமாய் உலகளவில் கவனம் கொள்ளும் பெருமை பெற்றது நல்லூர் கந்தசுவாமி ஆலயம். இவ் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ தினங்கள் உலகம் முழுவதும் வாழுகின்ற ஈழத்து இந்துக்கள் ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு விதத்தில் முக்கியத்துவமிக்கன.

முருக வழிபாடு தனித்துவமிக்கதொன்று. முருகன், தமிழ்க் கடவுள் எனப் போற்றப்படுபவர்: ஞானத்தின் வடிவமாக இருப்பவர். அக்கினியிலிருந்து அவதரித்த தன்மையினால் தூய்மையானவனாகவும், ஞானத்தின் ஊற்றாகவும், சக்தியினதும் - சிவத்தினதும் அம்சங்கள் பொருந்தப் பெற்றதனால் அளவற்ற ஆற்றல் மிக்கவனாகவும் விளங்குபவன் முருகன். அவன் தேவர்களின் சேனாதிபதி. தேவர்கள் என்பது மனதால் நன்மை நினைத்து செயலால் நன்மை விளைவிக்கும் எத்தகையவர்களையும் குறிக்கும். அத்தகைய நல்ல ஆத்மாக்களின் தலைவனாக திகழ்பவன் முருகன். அவன் எளியவர்க்கு எளியவனாகவும் வலியவர்க்கு வலியவனாகவும் வாய்க்கப் பெற்றவன். தேவலோகத்து அதிபதி இந்திரன் மகளை இடப்புறத்திலும் பூலோகத்து வேடுவத் தலைவன் நம்பிராசன் மகளை வலப் புறத்திலும் சக்திகளாக கொண்டு தனது ஆளுகை எல்லையை எளியவர் தொடக்கம் உயர்ந்தோர் வரை விசாலமாக்கிய வித்தகக் கடவுள் முருகப் பெருமான். எங்கள் மண்ணில் அவன் ஆளுகை செய்யும் இயல்பு தனித்துவமானது.

கொடியேற்றம் முதல் தீர்த்தத் திருவிழா வரை கோயில்களில் ஆண்டுக்கு ஒருமுறை நிகழும் திருவிழாக்களின் தத்துவங்கள் குறித்துச் சைவ நூல்களில் குறிப்புக்கள் காணப்படுகின்றன. இத் திருவிழாக்கள், படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய இறைவனின் ஐந்தொழில்களைக் குறிக்கின்றன.

இதன்படி தேர்த்திருவிழா அழித்தல் தொழிலைக் குறிப்பதாகக் கொள்ளப்படுகிறது. இத்தகைய தேரில் ஏறிச் சென்றே தேவர்களைக் காப்பதற்காக இறைவன் அசுரர்களை அழித்தான் என்ற தொன்மக் கதை இங்கு குறிப்பிடத்தக்கது. நல்லையம்பதியில் - தேர்த்திருவிழா நாளில் ஆறுமுகப் பெருமாண் கஜாவல்லி, மஹாவல்லி சமேத ஸ்ரீ சண்முகப்பெருமானாக எழுந்தருவது வழமை.

நல்லூர்த் தேர் என்பது யாழ்ப்பாணத்தவர்களுக்கு மட்டுமன்றி தமிழர்கள் வாழும் இடமெங்கும் எழுச்சி மிக்க நாளொன்றாகும். உள்ளூரில் இருந்து தேர்த்திருவிழாவை நேரடியாக காணக் கிடைத்தவர்கள் பெரும் பாக்கியம் பெற்றவர்கள். நேரடியாகத் தேர்த் திருவிழாவைக் காண முடியாதவர்களும் நேரடி ஒளி பரப்புகளின் வாயிலாக சண்முகப் பெருமானைக் கண்ணாரக் கண்டு களிப்பர்.

ஈழத்து ஆலயங்களில் அபிஷேகக் கந்தன் எனப் போற்றப்படும் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம், அன்னதானக் கந்தன் எனப் போற்றப்படும் செல்வச்சந்நிதி முருகன் ஆலயம் ஆகியவற்றின் வரிசையில் அலங்காரக் கந்தன் எனப் போற்றப்படுவது நல்லூர் கந்தசுவாமி ஆலயம் ஆகும்.

பெயருக்கேற்றால் போல பெருமை மிகு அலங்காரமும், செழிப்பும் மிக்கவர் நல்லூரில் எழுந்தருளியிருக்கும் வேலவர். ஆலயத்தின் விசேட தினங்களாயினும், மஹோற்சவ தினங்களாயினும் முருகப் பெருமான் எழுந்தருளும் போது அருளொளி வீசும் அவரது கம்பீரமான தோற்றமும், எல்லையில்லாக் கொள்ளை அழகும் அதற்குச் சான்று.

விசேட திருவிழா நாள்கள் தவிர மஹோற்சவ காலங்களில் தினமும் வேல் பெருமான் வள்ளி, தெய்வானை சமேதராக எழுந்தருளுவது வழமை. சில விசேட தினங்களில் ஆலயத்தில் உள்ள மற்றொரு மூர்த்தியான முத்துக்குமாரரும், தேர்த்திருவிழா மற்றும் கந்தசஷ்டி சூரன் போர் நாள்களில் ஸ்ரீ சண்முகப் பெருமானும் எழுந்தருளுவது வழமையாகும். எழுந்தருளுவது எந்த மூர்த்தியாக இருந்தாலும், எந்தப் பக்கத்தில் இருந்து பார்த்தாலும் கண்களைக் கொள்ளை கொள்ளும் அழகும் அருளும் நிறைந்த ஆலயத்தில் மிக நீண்ட காலத்துக்குள் இம்முறைதான் உள்வீதியில், அடியவர்கள் படைசூழாமல் திருவிழா இடம்பெறுகின்றது.

பஞ்சம் படை வந்தாலும், பாரெல்லாம் வெந்தாலும் அஞ்சுவமோ நாங்களடி கிளியே, நல்லூர் கந்தன் தஞ்சமடி என்று யோகர் சுவாமிகள் பாடியது போல நாட்டில் கொடிய யுத்தம் இடம்பெற்ற காலங்களில் கூட எவ்வித அச்சமுமின்றி நல்லூரானைத் தஞ்சமென்றடைந்த அடியவர்களுக்கு அருள்பாலித்த முருகன், இம்முறை தன் பக்தர்களைக் காப்பதற்கென்றே தன்னுடைய திருவிழாவை எளிமையாக்கிக் கொண்டார் என்று அடியவர்கள் நம்புகிறார்கள்.



1964 இல் திருப்பணி கண்ட தற்போதுள்ள சித்திரத்தேரைத் தானும் வடம் பிடித்து இழுக்கும் கோவில் அறங்காவலர் சண்முகதாஸ மாப்பாண முதலியார்.

(09ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கேடுகளை அழித்து நாடு காக்க வா சண்முகா!





தேருக்கு ஆரோகணம் செய்யும் சண்முகரும், தேர் இருப்புக்கு வந்த பின்னர் பச்சை சார்த்தி அமரந்து அருள்பாலிக்கும் சண்முகரும்

08 ஆம் பக்கத் தொடர்ச்சி....

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் தமிழுக்கும் சைவத்திற்கும் அருந் தொண்டுகள் ஆற்றிய யாழ்ப்பாணத்து அரசர்களது நேரடிப் பரிபாலனத்தில் இருந்து வந்த முக்கிய வணக்கத் தலங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. அதன் வரலாறு பற்றிய பல்வேறு குறிப்புகள் நூல்களில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அந்நியர் வருகையின் பின்னான சைவ சமய எழுச்சியின் முக்கியமானதொன்றாக நல்லூர் ஆலயத்தின் வியாபகம் குறிப்பிடப்படுகிறது. இவ்வாலயத்தின் வரலாறு பற்றி யாழ்ப்பாண வைபவமாலை பல குறிப்புகளைக் கொண்டிருக்கிறது எனப்படுகிறது. இது தவிர நல்லைக் கலிவெண்பா, நல்லை வெண்பா, நல்லையந்தாதி, நல்லைக் குறவஞ்சி, நல்லை கந்தசுவாமி விஞ்சதி, நல்லை வேலவருலா போன்ற நூல்களின் மூலம் நல்லைக்குமரனின் அருள் பரப்பப்படு கிறது.

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்துக்கென்று சில சிறப்பம்சங்களும், தனித்துவமான தன்மைகளும் உண்டு. நேரந்தவறாத ஆறு காலப் பூஜை, அடியவர்கள் அனைவரும் சமமாகப் பாவனை செய்யப்படும் வகையில் ஒரு ரூபா அர்ச்சனைச் சிட்டை என்பன நல்லூரானின் சிறப்பம்சங்கள்.

அதேபோலவே நல்லூர் ஆலயத்தில் தினமும் அதிகாலை வேளையில் இடம்பெறும் பள்ளியெழுச்சியும், மாலை வேளையில் இடம்பெறும் பள்ளியறைப் பூஜையும் நல்லூரின் தனித்துவமான மரபுகளில் ஒன்று.

ஒவ்வொரு நாளும் மாலையில் மூலஸ்தானத்தில் இருந்து முருகப் பெருமானை சிறிய மஞ்சம் ஒன்றில் எழுந்தருளச் செய்து அவரைப் பாடிப் பரவிய படி அழைத்துச் சென்று பள்ளியறையில் அமரச் செய்து திரு ஊஞ்சல் பாடித் துயிலுற வைப்பதும், காலை யில் பள்ளியறை வாயிலில் நின்று திரு நல்லூருத் திருப்பள்ளியெழுச்சி பாடி, முருகப் பெருமானை சிறு மஞ்சத்தில் ஏற்றி அழைத்து வந்து மூலஸ்தானத்தில் எழுந்தருளச் செய்து அன்றைய நாளின் அபிடேக ஆராதனைகளை ஆரம்பிப்பதும் தனித்துவமான மரபு.

எல்லாவற்றுக்கும் மேலாக நல்லூரில் அமர்ந்து அருளாட்சி புரிகின்ற ஸ்ரீ சண்முகப் பெருமான், பழனி சந்நிதானத்தில் இருக்கின்ற தெண்டாயுதபாணி, வள்ளி, தேவசேனா சமேத முத்துக்குமாரசாமி, மூலவராக அமர்ந்து அருளுகின்ற வேலவர், காவற் கடவுளான வைரவப்பெருமான் மற்றும் நல்லூர்த் தேரடி என்பன மாண்பும் மகிமையும் மிக்க அம்சங்களாகும்.










கிருபா லேணர்ஸ்
කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS
அரச அங்கிகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.
அ.கிருபாகரன்
-அதிபர்-
குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
மும்மொழியிலும். உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
தவணைமுறைக் கட்டணங்கள்.
இரவிலும் வாகன பயிற்சிகள்.
NP L 2222
தலைமையகம்
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4353 / 0777 22 5292
kirubalearners@gmail.com
www.kirubalearners.com
சுன்னாகம் 021 224 2022
நெல்லியடி 021 226 0700
பருத்தித்துறை 021 226 1100
ஆவரங்கால் 021 222 6688
சித்தங்கேணி 021 225 2500
சாவகச்சேரி 021 227 0700
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
விஸ்வமடு 021 320 1515
மன்னார் 023 225 1656
கிளிநொச்சி 021 228 5505
வவுனியா 024 222 7777


முதல் முதலில்
SLS
688
தரச்சான்றிதழ்
வழங்கப்பட்டது
பாதுகாப்புமிக்க காற்று
பாதுகாப்புமிக்க தருணங்கள்
கிருமிகளற்ற பாதுகாப்பான வலயத்தை உருவாக்குவோம்
SUN
99.9%
தொடர்புகளுக்கு -
0777806894 / 0770102417

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஆராய்ச்சி முடிவுகளை உலகிற்கு முன்வைத்து சுதேச வைத்தியத்தின் தரத்தை நிர்ணயிப்போம்!

## பிரதமர் மஹிந்த சூளுரை



ஆராய்ச்சி முடிவுகளை உலகிற்கு முன்வைத்து சுதேச வைத்தியம் மற்றும் ஆயுர்வேத மருத்துவத்தின் தரத்தை நிர்ணயிக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

மொனராகலை, சிரிகலவில் அமைக்கப்பட்டுள்ள ராஜபுர ஆயுர்வேத வைத்தியசாலையைத் திறந்து வைக்கும் நிகழ்வில், அலரி மாளிகையில் இருந்து காணொலி தொழில்நுட்பம் ஊடாக கலந்து கொண்ட போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ராஜபுர ஆயுர்வேத வைத்தியசாலை திறப்பு விழாவில் காணொலி தொழில்நுட்பம் ஊடாகக் கலந்து கொண்ட பிரதமர் மேலும் கூறுகையில் -

சுதேச மருத்துவத்தை உள்நாட்டு மற்றும் சர்வதேச மக்களின் நலனுக்காக மேலும் ஒரு படி முன்னேற்றும் இவ்வாறானதொரு நிகழ்வில் பங்கேற்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

அரசாட்சிக்கும், மருத்துவத்துக்கும் திறமையான மன்னர்கள் இருந்த பெருமைக்குரிய வரலாறு எமக்குள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

எமது முன்னோர்கள் பாதுகாத்த, எமது சுதேச சிகிச்சை முறைகளை அவ்வாறே எமது எதிர்கால தலைமுறையினருக்குப் பாதுகாத்து கையளிப்பது போன்றே அதனை சர்வதேசத்துக்கு அறிமுகப்படுத்துவது காலத்தின் தேவையாகும் என நாம் நம்புகின்றோம்.

அதற்காக சுமித் ராஜபுர போன்ற சுதேச வைத்தியம் மற்றும் ஆயுர்வேத மருத்துவத்தில் தேர்ச்சி பெற்ற எமது நாட்டின் சுதேச வைத்தியர்கள் முன்னெடுக்கும் இவ்வாறான செயற்பாடுகளை ஓர் அரசாங்கம் என்ற ரீதியில் நாம் எப்போதும் பாராட்டுகின்றோம்.

சுதேச வைத்தியம் என்பது எமது கலாசாரத்தின் ஒரு பகுதியாகும். அன்று மேற்கத்தேய வைத்திய முறை பிரசித்தி பெறாத காலப்பகுதியில் சுதேச மருத்துவத்தின் மூலமே மக்கள் பூரணமாகக் குணப்படுத்தப்பட்டனர்.

எவ்வாறான நோய்களுக்கும் அன்று கிராம நாட்டு வைத்தியர்களினாலேயே (வெத மஹத்தயா) சிகிச்சை அளிக்கப்பட்டது. இன்றும் நாட்டு வைத்திய பரம்பரையில் உருவாகிய நாட்டு வைத்தியர்கள் காணப்படுகின்றனர். அதே போன்று அதற்கு மேலாக முன்னேறிய ஆயுர்வேத வைத்தியர்களும் உள்ளனர்.

இதன் முக்கியத்துவத்தை முன்கூட்டியே அறிந்தவர்களாகவே சுதேச மருத்துவத்தை மேம்படுத்துவதற்கு இராஜாங்க அமைச்சொன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டோம். நாம் அறிந்த வகையில் அந்த அமைச்சால் சுதேச மற்றும் ஆயுர்வேத மருத்துவத்தில் பதிவுசெய்யப்பட்ட சுமார் இருபதாயிரம் வைத்தியர்களின் விவரங்கள் இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

சுதேச மற்றும் ஆயுர்வே மருத்துவம் இந்தக் காலப்பகுதியில் உலகம் முழுவதும் பிரசித்தி பெற்று வருகிறது. அதன் மூலம் நாம் உச்சப் பயனைப் பெற வேண்டுமாயின் தற்போதிருந்தே அதற்குத் தயாராக வேண்டும்.

பார்கின்சன், பக்கவாதம் போன்ற நரம்பியல் நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சுதேச வைத்திய மத்தியநிலையமொன்றை நமது நாட்டில் உருவாக்க நாம் ஏற்கனவே திட்டமிட்டுள்ளோம்.

இன்று திறக்கப்பட்டுள்ள ராஜபுர வைத்தியசாலையில் சுதேச வைத்தியம் போன்றே ஆயுர்வேத மருத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்டு சிகிச்சை அளிக்கப்படும் என எமக்கு அறிய கிடைத்தது.

இந்த வைத்தியசாலையிலும் பல தொற்றா நோய்களுக்கு சிகிச்சை வழங்க முடியும் என அவர்கள் கூறியுள்ளனர். அதனால் எதிர்காலத்தில் சுதேச சிகிச்சை முறைகளைத் தேடி வரும் வெளிநாட்டவர்களுக்கும் இவ்வாறான வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்கான வசதி கிட்டும்.

மருத்துவ குணம் கொண்ட மரங்கள், இலைகளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் நஞ்சற்ற உணவு பண்டங்கள், மருந்துப் பொருள்கள் மற்றும் அழகுசாதனப் பொருள்களுக்கும் உலகளாவிய ரீதியில் அதிக கேள்வி காணப்படுவதை நாம் மறந்துவிடக் கூடாது. அந்தக் கேள்வியை வெற்றி கொள்ள முடியுமாயின் அது நாட்டின் பொருளாதாரத்துக்கும் மிகப் பெரிய பலமாகும்.

இன்று உண்மையில் சரியான வைத்தியரை தெரிவுசெய்வதில் மக்கள் சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். சிலர் வைத்தியர்கள் போன்று போலியாக செயற்பட்டு மக்களை ஏமாற்றி வருகின்றனர். மேலும் சிலர் தமது கல்வியறிவுடன் தொடர்பற்ற நோய்களுக்கு சிகிச்சை அளித்து நோயாளர்களை துன்பத்தில் தள்ளுகின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் சமூகத்திலிருந்து விலக வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

அதேபோன்று சுதேச வைத்தியம், ஆயுர்வேத மருத்துவம் சார்ந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும், அதன் முடிவுகளை உலகுக்கு எடுத்துரைப்பதற்குத் திட்டமொன்றைத் தயார்ப்படுத்துமாறும் நாம் துறை சார்ந்த அதிகாரிகளுக்கு ஏற்கனவே அறிவுறுத்தியுள்ளோம். அதனால் இதுவரை கண்டிராத ஒரு தரத்தை இந்த அனைத்திலும் காண கிடைக்கும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

அன்று சுதேச மருத்துவம் பணத்தை எதிர்பார்த்து மேற்கொள்ளப்பட்ட ஒரு விடயமல்ல. நான் அறிந்த வகையில் பௌத்த பிக்குமார் உள்ளிட்ட மத குருமார்களுக்கு இவ்வைத்தியசாலையில் இலவசமாக சிகிச்சை அளிக்கப்படுகிறது. அதனை ஒரு மகத்தான செயற்பாடாக நாம் அனைவரும் பாராட்டுகின்றோம் என்பதையும் இத்தருணத்தில் நினைவுகூர விரும்புகிறேன். -என்றார்.

இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ, நேற்றைய தினம் ராஜபுர வைத்தியசாலையை வைபவ ரீதியாக திறந்து வைத்ததுடன், அங்கு கண்காணிப்பு விஜயமொன்றையும் மேற்கொண்டார்.

தொற்றா நோய்கள் பலவற்றிற்கு சுதேச வைத்திய முறையில் சிகிச்சை அளிக்கும் மொனராகலை ராஜபுர ஆயுர்வேத வைத்தியசாலை, நாற்பது நோயாளர்கள் ஒரே நேரத்தில் தங்கி சிகிச்சை பெறுவதற்கு ஏற்ற வசதிகளை கொண்டுள்ளது.

இவ்வைத்தியசாலையில் வெளி நோயாளர் பிரிவு மற்றும் தங்கி சிகிச்சை பெறும் பௌத்த பிக்குமார் உள்ளிட்ட மத குருமார்களுக்கு இலவசமாக சிகிச்சையளிக்கப்படும்.

வைத்தியசாலையின் திறப்பு விழாவில் வெல்லவாய சிறி பியரதன வித்யாயதனயவின் விகாராதிபதி வணக்கத்துக்குரிய கந்தஉட பங்குவே சுதம்ம தேரர் உள்ளிட்ட மகாசங்கத்தினர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர் குமாரசிறி ரத்நாயக்க, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மஉதயசாந்த குணசேகர, ராஜபுர மருந்தாக்கற் பொருள்கள் உற்பத்தி கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் ராஜபுர உள்ளிட்ட ஆயுர்வேத வைத்தியசாலை ஊழியர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# ‘பாதுகாப்பாக இருங்கள்’ எனும் தொனிப்பொருளில் கிளிநொச்சியில் கொரோனா ஒழிப்பு வேலைத்திட்டம்









கிளிநொச்சி ஊடக மையத்தால் ‘பாதுகாப்பாக இருங்கள்’ எனும் தொனிப்பொருளில் கொவிட் ஒழிப்பு வேலைத்திட்டம் நேற்று (சனிக்கிழமை) காலை 10 மணிக்கு ஆரம்பமானது.

கொவிட் தொற்று காரணமாக உயிரிழந்த சுகாதாரத் துறையினர், ஊடகவியலாளர்கள், சமூக சேவையாளர்கள், பொதுமக்களின் ஆத்ம சாந்திக்கான விசேட ஆத்ம சாந்தி பிரார்த்தனையும், கொவிட் பாதிப்பிலிருந்து நாடும், உலகமும் பாதுகாக்கப்படவும் விசேட வழிபாடும் முன்னெடுக்கப்பட்டது. கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தில் இடம்பெற்ற வழிபாட்டை தொடர்ந்து புனித திரேசா ஆலயத்திலும் ஊடகவியலாளர்கள் விசேட வழிபாட்டில் ஈடுபட்டனர். தொடர்ந்து, குறித்த வேலைத் திட்டத்தின் முதல் நாளான நேற்றைய தினம் கிளிநொச்சி கல்வி, கலாசார அபிவிருத்தி அமையத்துடன் இணைந்து சுகாதாரப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

கிளிநொச்சி சுகாதார சேவைகள் பணிமனையில் கர்ப்பவதிகளுக்கான மாதாந்த சிகிச்சைக்கு வருகை தந்திருந்தவர்களுக்கு முகக்கவசங்கள், தொற்று நீக்கி திரவங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

தொடர்ந்து சதொச விற்பனை நிலையம், மீன், மரக்கறி விற்பனை நிலையங்களில் கூடியிருந்த மக்கள், ஊழியர்கள், வர்த்தகர்களுக்கும் முகக்கவசங்கள், தொற்று நீக்கி திரவங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இதேவேளை கூட்டமாக நிற்றலைத் தவிர்க்கவும், சமூக இடைவெளிகளைப் பின்பற்றி கொவிட் தொற்றிலிருந்து பாதுகாப்பாக இருந்து பாதுகாப்பாக செயற்படுமாறு அறிவுறுத்தல்களையும், ஆலோசனைகளையும் மக்களுக்கு வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.09.2021இல் வெளியிடப்பெற்றது.